மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒன்றியம் என்பதும் ஒரு பொறுப்புள்ள சமூக அமைப்புதான். தமிழகத்தில் மொத்தம் 2,603 துணை விடுதிகள் இருக்கின்றன. அதில் 2,348 துணை விடுதிகளில் ஆயாக்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். மிச்சமுள்ள இடங்களிலும் அந்தத் தாய்மார்கள் பணி யாற்ற, ஏற்படுகின்ற செலவில் 2/3 பங்கை அரசாங்கம் கொடுத்தும், 1/3 பங்கை ஒன்றியம் ஏற்றுக்கொள்ள முன்வராததால் நியமிக்கப்படவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் ஒன்றியத்திற்கு இந்தத் தன்மையை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Leprosy Survey Project.

* 748 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any financial assistance from the City Council of Munich (West Germany) has been received for the leprosy survey project in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, மாநில அரசு இத்தகைய ஸ்தாப னங்களை உதவி கேட்டு அணுகியதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கேள்வி போட்ட தன்மையின் காரணமாக விடை மறுப்பாக வந்தது. தமிழக அரசுக்கு அவர்கள் நேரடியாக உதவவில்லை என்பது விடையினால் பெறப்பட்டது. ஆனால் இந்த மேற்கு ஜெர்மனியைப் பொறுத்தவரையில் இங்கே சில அமைப்புகளை அவர்களாகவே ஏற்படுத்தி, அதன் மூலம் தொழுநோய் தடுப்புப் பணிகளை செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட அமைப்பு வடசென்னை பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது குடிசைப் பகுதிகளில் வாழும் மக்கள் அதிக மாக உள்ள இடங்களில் தொழுநோய் தோன்றுகின்ற கட்டத்திலேயே அறிந்து அவர்களுக்கு சிகிச்சை செய்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. மாநில அரசு நேரடியாக அவர்களை உதவி கேட்டு அணுக முடியாது. மத்திய அரசின் அனுமதி அதற்கு வேண்டும். அதனால் நாம் அணுகவில்லை. சோஷியல் சர்வீஸ் என்ற முறையில் அவர்களாகவே முன்வந்து தொழுநோய் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.